**FRIDAY SERMON/ வெள்ளிக்கிழமை குத்துஃபா**

**23 June 2017 (28 Ramadan 1438 Hijira)**

# Advices Before the Eid – Ul - Fitr

## “ஈதுல்பித்தர் சில அறிவுரைகள்”



### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஸ்ஹுதும் தஅவுசும் அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

நாம் இப்போது, அருள் நிறைந்த ரமலான் மாதத்தின் இறுதி தினங்களிலாகும். இந்த மாதம் நிச்சயமாகவும் சென்றடைய போகின்றது. இபாதத்து செய்வதற்கும் மனந்திரும்பிக் கொள்வதற்குமான இந்த நல் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டோர்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள். உங்களுக்கு சாதகமாகவோ

அல்லது பாதகமாகவோ சாக்ஷியமளிக்க இந்த ரமலானும் உண்டு என்பதை நினைவு கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டும் நற்செயல்கள் கொண்டும் இந்த மாதத்தை அருளுக்குரியதாக மாற்றிக் கொண்டோர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அத்தகை நற்செயல்களை நோன்புக்கு பின்பும் தொடர்ந்துக் கொள்ளுங்கள். ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதற்கான பிரதிபலன் என்பது உண்மையில் அல்லாஹ்வே தான். அல்லாஹ் தன்னை வெளிப்படுத்திக் கொள்வது நோன்பு நோற்பு நாட்களிலும் லைலத்துல் கதிர் நாளிலும் ஆகும். இந்த ஆன்மீக சூழ்நிலைகளிலிருந்து இறை ஆசீர்வாதத்தையும் அருட்களையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தோர்கள் அதிர்ஷ்ட சாலிகள் ஆவார்கள். நிச்சயமாகவும் எந்த ஓர் ஆன்மாவுக்கும் அதன் நியாயமானதும் நீதியானதுமான நற்கூலியை அல்லாஹ் வழங்காமலிருக்கமாட்டான்.

திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

**"அணு அளவு நன்மை செய்தவர் அதைக் காண்பார்"** (99 – 8)

ரமலான் நிறைவடையும் பொழுது ஆசரித்துக் கொள்வதற்கு பல்வேறு தரத்தில்பட்ட ஆராதனை முறைகளைப்பற்றி அல்லாஹ் முஸ்லீம்களுக்கு கட்டளையிட்டுள்ளான். இறையன்பும் பயபக்தியும் வெளிப்படுத்திக் கொள்ளவும் நம் நம்பிக்கையை பலப்படுத்திக் கொள்ளவும், நம் நற்செயல்களின் எடையினை அதிகரித்துக் கொள்ளவும், இத்தகை ஆராதனைமுறைகள் உதவி புரிகின்றது.

# தக்பீர் (Takbir)

1. **தக்பீர் என்பது, அல்லாஹ்வின் மிக உன்னதமான பதவிகளை எடுத்துரைப்பதாகும். ரமலான் மாதத்தின் இறுதியில் சூரிய அஸ்தமனத்தோடு "ஷவ்வால் மாதப்பிறவி தென்பட்டுக் கொள்கின்றது. ஈதுல்பித்தர் ஆரம்பித்துக் கொள்வது புதிய மாதப்பிறவியின் அந்த இரவிலாகும். இஸ்லாம் சந்திர வருட கணக்காகயிருப்பதால் பகலுக்கு முன்னவே வரும் இரவுக்கு முக்கியத்துவமிருக்கின்றது. அதனால் புதிய ஹிஜ்ரா வருட தேதி ஆரம்பித்துக் கொள்வது சூரிய அஸ்தமனத்தோடாகும். அதன்படி இன்று வெள்ளிக்கிழமை ஜூமா நாள். அதாவது 28 ரமலான் 1438 ஹிஜ்ரா வருடம். மஹ்ரீப் தொழுகை ஆரம்பிப்பதோடு அடுத்த நாள் ஆரம்பிக்கின்றது. சனிக்கிழமை அதாவது ரமலானின் இறுதி நாளில் நாம் "தறாவீஹ்" தொழுதுக் கொள்வதில்லை. மஹ்ரீப் தொழுகையோடு புதிய நாள் ஆரம்பித்துக் கொள்கின்றது. அதனால் வருகின்ற ஞாயிறு இரவு மாதப்பிறவி இன்ஷா அல்லாஹ் தென்படுவதோடு ரமலான் 30 நாட்கள் பூர்த்தி செய்து ஈதுல்பித்தர் ஆரம்பித்துக் கொள்ளலாம்.**

உங்களின் கவனத்தை ஒரு விஷயத்தின்பால் அழைக்கின்றேன், அதாவது 30-ம் தேதி மாதப்பிறவி தென்பட்டுக்கொண்டாலும் அல்லாவிட்டாலும் இஸ்லாமிக நாள்காட்டி படி அடுத்த நாள் புதியமாதம் ஆரம்பித்துக் கொள்கின்றது. சூரிய வருடத்தைப் போன்று 31 நாட்கள் உட்படுகின்ற மாதங்கள் சந்திர வருட நாள்காட்டியில் இல்லை. 29 அல்லது 30 நாட்கள் முழுமையாகும் போது ஹிஜ்ரா வருடப்படி ஒரு மாதம் பூர்த்தியாகின்றது.

ஹஸ்ரத் ஆயிஷா(ரலி) அவர்களிலிருந்துள்ள ஒரு கதீஸ் ரிப்போர்ட் கீழ்வருமாறாகும்.

**மற்று மாதங்களை ஒப்பிட்டு பார்த்தால் ஷாபான் மாதத்தின் நாட்களை கணக்கிட்டுக் கொண்டதைப் போன்று உற்சாகத்துடன் பிறமாதங்களின் நாட்களை அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கணக்கிட்டுக் கொண்டதில்லை. ரமலான் மாதப்பிறவியின் சந்திரன் தென்பட்டுக்கொண்டால் அன்னார் நோன்பு நோற்பை ஆரம்பித்து விடவும் ஷவ்வால் மாதப்பிறவி தென்படுவதுவரையில் அதை தொடர்ந்துக் கொள்ளவும் செய்வார். மேகத்தை மூடிக்கொள்வதன் காரணத்தால் ஆகாயத்தில் மாதப்பிறவி காட்சியளிக்காமலிருக்கும் சந்தர்பங்களில் திருதூதர்(ஸல்) அவர்கள் 30 தினங்கள் நோன்பு நோற்றிருந்தார்''** (அபூதாவத்)

ஹஸ்ரத் அபூஹுறைற (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் "சந்திரன் பிறவியெடுத்துக் கொண்டால் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பை ஆரம்பித்துக் கொள்ளவும் ஷவ்வால் மாதத்தின் சந்திரப் பிறவியைக் கண்டுக் கொண்டால் நோன்பு நோற்பை முடித்துக் கொள்ளவும் வேண்டும். ஆகாயம் மேகங்களைக் கொண்டு மூடப்பட்டிருந்தால் 30 நாட்களுடன் நோன்பு நோற்பை முடித்துக் கொள்ள வேண்டும்". அந்நிலையில் ரமலான் மாத இறுதியிலுள்ள மஹ்ரீப் தொழுகையோடு ஈதின் தக்பீரை ஆரம்பித்துக் கொள்ளலாம். நம் நபி அரசர் முஹம்மது(ஸல்) அவர்கள் மேற்கொண்டது போன்று ரமலானுக்கு பிறகு காட்சியளிக்கும் சந்திரப்பிறவி ஈதுல்பித்தரினுடையதாகும். அந்நேரம் நாம் ஈது கொண்டாடுகின்றோம். ஈது முபாரக் நல்வாழ்த்துகள் அனைவருக்கும் பகிர்கின்றோம். அவ்வாறு ரமலான் அதிகாரபூர்வம் நிறைவடைகின்றது. திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான் **"நோன்பின் எண்ணிக்கையை நீங்கள் முழுமையாகுவதற்காகவும் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அல்லாஹ்வைப் பெருமைப்படுத்திடவும் நன்றி செலுத்திடவும். (வேறு நாட்களில்) நோன்பு நோற்கும் சலுகை வழங்கப்பட்டிருக்கின்றது** (அல்பக்கரா 2: 186)

**தக்பீர் கூறிக்கொள்வதன் முக்கியத்துவம் :** தக்பீர் இவ்வாறு **"அல்லாஹ் அக்பர் அல்லாஹ் அக்பர் லா இலாஹ இல்லல்லாஹ் வல்லாஹீ அக்பர் அல்லாஹ் அக்பர் லா லில்லாஹில் ஹம்து". ("அல்லாஹ் உயர்ந்தவன்! அல்லாஹ் உயர்ந்தவன்! அனைத்து புகழுக்கும் உரியவன் அவன் மட்டுமாகின்றான்!")**

நபி அரசனின் நடைமுறைப்படி நம்பிக்கையாளர்களாகிய ஆண்கள் தக்பீர் சத்தமாக கூறவேண்டும். பள்ளி வாயிலிலும் சொந்த மனைகளிலும் ஷவ்வால் மாதப்பிறவியை பிரகடனப்படுத்தும் சந்திரனுடைய காட்சியைத் தொடர்ந்து கடமையாக்கப்பட்ட தொழுகைக்குப்பின் (அதாவது மஹ்ரீப்) குறிப்பாக தக்பீர் கூறிக்கொள்ள வேண்டும். பெண்களிடமான அறிவுரையென்னவென்றால் அவர்கள் தம் தக்பீர், ஓசையின்றி கூறிக்கொள்ள வேண்டும். அவர்களின் குரல்களை மறைத்துக் கொள்வதற்கு கட்டளையிருப்பதால்! அந்நியர்கள் அருகாமையில் இல்லாத நேரங்களில் பிற பெண்களின் மத்தியிலிருக்கும் பொழுது சிறு ஓசையுடன் மற்று பெண்கள் கேட்குமளவிற்கு தக்பீர் கூறிக்கொள்ளலாம்.

நம்பிக்கையாளர்களாகிய தம் அடியார்களுக்காக அல்லாஹ் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் ஜுமா தொழுகையை ஈதாக்கி **(ஈதுல்ஜுமா)** யுள்ளான். அத்தோடு மற்று இரண்டு முக்கியமான கொண்டாட்டங்களும் முஸ்லீம்களுக்கு அளித்துள்ளான். நோன்பு நோற்பு மாதத்தின் இறுதியில் வரும் "ஈதுல் பித்தரும் பலியிடுதல் தியாகத்தை நினைவூட்டுகின்ற ஈதுல் அத்ஹாவும். இந்த இரண்டு முக்கியமான ஈது தினங்களுக்கிடையில் சிறப்பின் விஷயத்தில் ஈதுல் அத்ஹாவுக்கு பிறகே ஈதுல்பித்தர் வருகை தருகின்றது. **ஈதுல் அத்ஹாவை, ஈதுல் கபீர் (பெரிய பெருநாள்) என்றும் ஈதுல் பித்தரை, ஈதுல் சஹீர் (சிறிய பெருநாள்) என்றும் அறியப்படுகின்றது.** இந்த இரண்டு பெருநாள் சந்தர்பங்களிலும் நம்பிக்கையாளர்களாகிய பெண்களுடையவும் ஆண்களுடையவும் பங்கேற்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நான் முன்னவே கூறியது போன்று பெண்ணும் ஒரு நம்பிக்கையாளராவார். பள்ளிவாயிலும் ஈது ராஹியிலும் அவர்களுக்கும் இடமுண்டு. பெருநாள் தொழுகையிலும் சொற்பொழிவு நடைபெறும் மைதானத்திலும் அவர்களுக்கு பங்கேற்க்கலாம். ஆண்களுக்கு மட்டுமின்றி ஈதின் அருட்களுக்கும் நன்மைக்கும் முடிந்தவரையில் ஆளாகிக் கொள்ள பெண்களுக்கும் உரிமையுண்டு.

அல்லாஹ்வின் தூதர் பெண்களும் ஆண்களும் உட்படுகின்ற தம் தோழமை கூட்டங்களிடம் இந்த பிரார்த்தனை முறையை கடைபிடித்திட கட்டளையிட்டார். தங்களின் மனைகளிலிருந்து, ஈது தொழுகை நடைபெறும் இடத்திற்கு செல்லும் பெண்களிடம் அன்னார் கூறினார். அன்னாரின் அக்கட்டளைகளுக்கு அனைவரும் கட்டுப்பட்டுக் கொள்ள வேண்டும். திருக்குர் ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்

**"நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள்! இத்தூதருக்கும் கட்டுப்படுங்கள்! உங்கள் செயல்களைப் பாழாக்கிவிடாதீர்கள்"** (47 -34)

ஹஸ்ரத் உம்மு அதியா(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார். **"ஈது நாளில் மனையை விட்டு வெளியே வருவதற்கு எங்களிடம்**

**கட்டளையிடப்பட்டிருந்தது. கன்னிப் பெண்களிடத்திலும் மாதவிடாயாகயிருக்கும் பெண்களிடத்திலும் வெளியே வருமாறு கட்டளையிடப்பட்டிருந்தது. இது, ஆண்களின் பின் அணியாக நின்று தக்பீர் கூறிக்கொள்ளவும் அல்லாஹ்வை வணங்கிக் கொள்ளவும் அவன் அருட்கொடைகளுக்காக அன்றைய நாளில் எதிர்பாரலுடனிருப்பதற்கும் பாவமன்னிப்புக்கு பிரார்த்தனை செய்வதற்குமாகும்."**

மற்றொரு ரிப்போர்ட்டில் இவ்வாறு காணலாம்.

**"ஈதுல் பித்தர் ஈதுல் அக்தா பிரார்த்தனைகளில் பங்கேற்க மனைகளை விட்டு வெளிவருமாறு பெண்களிடம் அல்லாஹ்வின் தூதர் கட்டளையிட்டார். கன்னிப்பெண்களும் மாதவிடாயாக இருக்கும் பெண்களும் அதில் உட்படுகின்றனர். மாதவிடாயாகயிருக்கும் பெண்களுக்கு தொழுகை கட்டாயமல்ல. ஆனால் மற்று நற்செயல்களில் அவர்களுக்கு ஈடுபட்டுக் கொள்ளலாம். இறைவனிடம் வேண்டிக் கொள்ளவும் செய்யலாம். ஹஸ்ரத் உம்மு அதியா(ரலி) அவர்கள் ரசூல்(ஸல்) விடம் கூறினார். எங்களில் சிலருக்கு மூடிப்புதைப்பதற்கு மேல் ஆடையில்லை. நண்பர்களிடத்திலிருந்து கடன் பெற்று பயன்படுத்திக் கொள்ளுமாறு நபி அரசன்(ஸல்) அவர்களுக்கு அறிவுரைத்தார்"** (புகாரி&முஸ்லீம்)

2. தக்பீரின் ஓசை முழக்கிக் கொள்வதோடு நாம் செய்யவேண்டிய மற்றொரு பிரார்த்தனை முறையாகும் **பித்தர் சக்காத்**. இது **சதகத்துல் பித்திர்**(**Sadagat – Ul – Fitr**) என்றும் அறியப்படுகின்றது. இஸ்லாமின் நெடும் தூண்களில் ஒன்றான சக்காத் வழங்கிக் கொள்ளும் கடமையுடன் பித்திர் சக்காத்தை ஒன்றிணைத்திடக் கூடாது. பித்திர் சக்காத் என்பது தினசரி வருமானம் வாயிலாக செல்வம் சேர்த்திருக்கும் எந்த ஓர் முஸ்லீமுக்கும் அது கட்டாயமாகும். ஈதுல் பித்தர் தொழுகைக்கு முன்னதாகவே அது வழங்கிக் கொள்ளவும் வேண்டும். சமய எல்கைக்குள் நின்று செய்ய வேண்டிய நற்செயலாகுமது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்களிலிருந்துள்ள ஒரு ரிப்போர்ட் பாருங்கள். "ஈது தொழுகைக்கு செல்வதற்கு முன்னதாகவே பித்தர் சக்காத் வழங்க வேண்டும் என அல்லாஹ்வின் தூதர் மக்களிடம் கட்டளையிட்டார்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்களிடமிருந்துள்ள ஒரு ரிப்போர்ட் இவ்வாறாகும் **"ஒவ்வொரு முஸ்லீமும் அவர்கள் பெண்களாகட்டும், ஆண்களாகட்டும், சுதந்திரமாகயிருப்போர்களாகட்டும், அடிமைகளாகட்டும், வாலிபர்களாகட்டும், முதுமையடைந்தவர்களாகட்டும் அவர்கள் பித்திர் சக்காத்தாக வழங்கவேண்டியது என்ன வென்று அல்லாஹ்வின் தூதர் கூறினார். பேரீச்சம்பழம் அல்லது மற்று உணவு**

**பொருட்கள், (கிட்டத்தட்ட மூன்று கிலோ அளவு) மக்கள் ஈதுல் தொழுகைக்கு செல்வதற்கு முன்னதாக வழங்கிக் கொள்ள வேண்டும்.”**

ஹஸ்ரத் அபூசெய்து அல்குத்ரி(ரலி) அவர்களிலிருந்துள்ள ஒரு ஹதீஸ் ரிப்போர்ட் இவ்வாறாகும். **“பித்திர் சக்தாதாக நாங்கள் வழங்கியிருந்தது உணவு பொருட்களோ, அரிமணிகளோ, உலர்ந்த திராட்சையோ, பாலாடைக்கட்டியோ ஆகயிருந்தது”** (கிட்ட தட்ட மூன்று கிலோ அளவிற்கிருக்கும்) (புகாரி & முஸ்லீம் )

ஈதுல்பித்தர் தொழுகைக்காக செல்வதற்கு முன்னவே சிறிய அளவில் பேரீச்சம்பழம் புசிப்பது நம் பிரிய தூதருக்கு வழக்கமாகயிருந்தது. அந்த திரு சுன்னத்தின் அடிப்படையில் பார்த்தால் அவ்வாறு நம்பிக்கையாளர்களும் புசித்துக்கொள்வது நன்காகும் என உங்களிடம் கூற வேண்டுமென்று நான் எண்ணுகின்றேன்.

ஹஸ்ரத் அனஸ் இப்னுமாலிக்(ரலி) அவர்களிலிருந்துள்ள ஒரு ரிப்போர்ட் பாருங்கள்

**“பேரீச்சம்பழங்கள் ஒற்றையெண்களில் புசிக்காமல் திருநபி(ஸல்) அவர்கள் ஈதுல்பித்தர் தொழுகைக்கு சென்றதில்லை”** (புகாரி& அஹமது)

ஈதுல்பித்தர் கொண்டாட்டங்கள் குறிப்பாக, ஈது தொழுகை மிக எளிமையுடனும் பக்தியுடனும் செய்துக்கொள்ள வேண்டும். நம்பிக்கையாளராகிய பெண்களும் ஆண்களும் சுத்தமான ஆடைகளை அணிந்துக் கொள்ள வேண்டும். அன்றைய நாள் அதாவது ஈது நாள் என்பது தக்பீர் ஓசைகள் முழக்கி அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்துரைத்து ஆன்மாவின் வனப்பை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பமாகும். இறைவனை நினைவு கொண்டும் மற்று ஆராதனைகளில் ஈடுபட்டுக் கொண்டும் நற்செயல்கள் புரிந்துகொண்டும் இதை நிறைவேற்றிக்கொள்ளவும் வேண்டும். நிச்சயமாகவும் இது மகிழ்ச்சியடைய வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். குறிப்பாக அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு ரமலானில் அணுக வேண்டிய அறிவுரைகளை சரியான முறையில் கவனித்து செயல்பட்டுக் கொள்வோர்களுக்கு! அத்தகையாளர்களுக்கு நிச்சயமாகவும் சரியான ஈதை கொண்டாடலாம். ஆகவே என்னுடைய அனைத்து தோழர்களும் சஹாபிகளுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் முன்கூட்டியே நான் ஈதுல்பித்தர் நல்வாழ்த்துக்கள் கூறுகின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அருள் புரிவானாக! இந்த அருளுக்குரிய மாதத்தில் உங்களின் தியாகங்களை அவன் ஏற்றுக்கொள்ளட்டும். அவனது அங்கீகாரத்திற்கும் அருளுக்கும் உங்களை அவன் ஆளாக்கிக் கொள்ளட்டும். ஆமீன்.

**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India

**Cell:** 9789180817
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com



**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817